வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை - 2017
# Term Examination, July - 2017

| சித்திரக்கலை I | தரம் :- 12 (2018) | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :-**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதிI**

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

**பகுதிII**

- இப்பகுதியில்,மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

## பகுதி- I

❖ **1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைA, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவுசெய்க.**



| A | B | C | D | E |
|---|---|---|---|---|

1. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இசுறுமுனியவில் அமைந்துள்ள கல்லில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கலினால்,
   1) தீயிற்கு அதிபதியான அக்கினிபகவான் எடுத்துக்காட்டப்படுகிறார்.
   2) நீருக்கு அதிபதியான வர்ணபகவான் எடுத்துக்காட்டப்படுகிறார்.
   3) சூரிய வம்சத்தவனான அர்ச்சுனன் நினைவூட்டப்படுகிறான்.
   4) அக்கினிபகவானும் வர்ணபகவானும் சித்திரிக்கப்படுகின்றனர்.
   5) சித்தார்த்தர் நினைவூட்டப்படுவதுடன் 'கந்தக' எனும் குதிரையும்நினைவூட்டப்படுகின்றது.
   (……...)

2. Bஎழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கல் கிடைக்கப்பெற்றது.
   1) பொலன்னறுவை ஹெட்டதாகேயிலிருந்து ஆகும்.
   2) மிகிந்தலை கண்டக சைத்தியவிலிருந்து ஆகும்.
   3) பொலன்னறுவை அட்டதாகேயிலிருந்து ஆகும்.
   4) பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்ல மன்னனின் அரச மாளிகையிலிருந்து ஆகும்.
   5) அனுராதபுர மிரிசவெட்டிய நுழைவாயிலிலிருந்து ஆகும். (……...)

3. C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கல்
   1) குப்த கலைமரபைக்காட்டும் சிலை
   2) பல்லவ கலைமரபைக்காட்டும் சிலை
   3) அமராவதி கலைமரபைக்காட்டும் சிலை
   4) மதுரா கலைமரபைக்காட்டும் சிலை
   5) மகாயான பௌத்த சிலை

(……...)

4. D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கல்.
   1) மைக்கல்அஞ்சலோவினால் ஆக்கபட்ட கருங்கல் சிற்பம்
   2) மைக்கல்அஞ்சலோவினால் ஆக்கபட்ட சலவைக்கல் சிற்பம்
   3) மைக்கல்அஞ்சலோவினால் ஆக்கபட்ட மரச் சிற்பம்
   4) மைக்கல்அஞ்சலோவினால் ஆக்கபட்ட வெண்கலச் சிற்பம்
   5) மைக்கல்அஞ்சலோவினால் ஆக்கபட்ட செம்மணல் கல் சிற்பம்

(……...)

5. E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சாஞ்சி சிற்பத்தினால் சித்தரிக்கப்படுவது
   1) ஜட்டில தமணய ஆகும் 2) மகாகபி ஜாதகக் கதையாகும் 3) நிரஞ்சனா நதியாகும்
   4) சங்கிஸ்தபுர ஏணிக்காட்சியாகும் 5) ஜேதவன வழிபாட்டுத்தலமாகும் (……...)

❖ **6 தொடக்கம் 10 வரையான வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

6. கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான கூற்று
   1) வர்ண அல்லது கோடுகளின் ஊடகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இயற்கையான வெளிப்பாடாகும்.
   2) அனுபவமொன்றை வெளிப்படுத்தும் வர்ணமயமான அமைப்பாகும்.
   3) கற்பனையான அல்லது உண்மைச் சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்ட வெளிப்பாடாகும்.
   4) ஏதேனுமொரு கருப்பொருளை உணர்வுபூர்வமாகவும் இரசனைக்குரியதாகவும் கட்புல ஊடகங்களினால் வெளிப்படுத்துவதாகும்.
   5) கண்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வர்ணங்களைக் கொண்ட அல்லது வர்ணங்களற்ற அமைப்பாகும். (……...)

agaram.lk

7. ஏதேனுமொரு அலங்காரத்தில் மனங்கவர் தன்மையை உருவாக்குவதற்காக,
   1) இயற்கையான வடிவங்களையும் வர்ண பேதங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.
   2) மூட்டற்ற வடிவங்களையும் ஒத்த வர்ணங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.
   3) ஆக்கபூர்வமான வடிவங்களையும் மனங்கவர் வர்ணங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.
   4) குளிர், வெப்ப வர்ணங்களை முறையான கோடுகளின் கோலங்களில் பயன்படுத்துதல் வேண்டும்.
   5) எளிமையான வடிவங்களையும் வரையறுக்கப்பட்ட வர்ணங்களையும் தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். (……...)

8. புடைவை அச்சிடலுக்காக பரவல் அலங்காரமொன்றைத் திட்டமிடும் போது மிக முக்கியமாக அமைவது
   1) ஒரேயளவான பல்வேறு அலகுகள் முழுத் தளத்திலும் பரவலடையும் விதத்தில் வரைதல்
   2) அலங்காரப் பகுதியொன்று அதற்குச் சமமான இன்னுமொரு பகுதியுடன் தொடர்புறும் விதத்தில் வரைதல்.
   3) கேத்திரகணித மாதிரியொன்றின் மீது சமச்சீராய் அமையும் விதத்தில் வடிவங்களைப் பயன்படுத்துதல்
   4) முழுத் தளத்திலும் பரவலடையும் விதத்தில்ஏதேனுமொரு மாதிரிக்கமைய வடிவங்களைப் பயன்படுத்துதல்.
   5) முழுத் தளத்திலும் பரவலடையும் விதத்தில் கைகளை அங்குமிங்கும் அசைத்து வடிவங்களை வரைதல். (……...)

9. அசையாப் பொருட்கூட்டச் சித்திரப் பயிற்சியின்மூலம் எதிர்பார்க்கப்படுவது
   1) அனைத்து பொருட்களும் தெரியக்கூடிய விதத்தில் வரைந்து முப்பரிமான இயல்புகளை வெளிப்படுத்துதல்.
   2) கோட்பாடுகளைப் பயன்படுத்தி பொருட்களின் குணவியல்புகள் சித்திரிக்கப்படும் விதத்தில் வெளிப்படுத்துதல்
   3) பொருட்கள் அவை இருக்கும் விதத்திலேயே வரைந்து, பின்புலத்தை விருப்புக்கேற்றவாறு வரைதல்.
   4) பொருட்களின் வடிவங்களை முப்பரிமான இயல்புகள் வெளிப்படும் விதத்தில் ஆக்கபூர்வமாக வரைதல்.
   5) பொருட்களின் வடிவங்களையும் வர்ணங்களையும் கற்பனையாகப் பயன்படுத்துதல்.(……...)

10. சுவரொட்டியொன்றுக்குரிய சித்திரமொன்றைத் திட்டமிடும்போது,
   1) உரிய கருப்பொருளை சுவரொட்டியின் ஒரு பகுதியாக உள்ளடக்குதல் வேண்டும்.
   2) தொடர்பாடல் இலகுதன்மைக்காக அனைத்து வடிவங்களையும் இயற்கையாக வரைதல் வேண்டும்.
   3) கவனத்தை ஈர்ப்பதற்காக, பிரகாசமான வர்ணங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.
   4) தொடர்பாடலின் முக்கியத்துவமும் குறியீட்டுப் பாவனையும் முக்கியத்துவம் பெறும்.
   5) ஆக்கபூர்வமான வடிவங்களையும் கவர்ச்சிகரமான வர்ணங்களையும் பயன்படுத்துதல் வேண்டும். (……...)

❖ ***11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை P, Q, R, S, T எனப் பெயரிடப்பட்ட பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.***




**P**



**Q**



**R**



**S**



**T**

agaram.lk

11. P எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்.
   1) தலதாமாளிகையின் பெரஹெரவைச் சித்தரிக்கும், தேசிய கலாபவனக் காட்சியகத்தில் காணக்கூடியதாகும்.
   2) தலதா மாளிகையின் பெரஹெரவைச் சித்தரிக்கும், தேசிய அரும்பொருள் காட்சியகத்தில் காணக்கூடியதாகும்.
   3) தேசிய கலாசாரத்தை எடுத்துக்காட்டும், மத்தள விமான நிலையத்தில் காணக்கூடியதாகும்.
   4) கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் காணக்கூடியதாயுள்ள இலங்கைக் கலைஞரொருவரின் நிர்மாணிப்பாகும்.
   5) கலைத்துவக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி வரையப்பட்ட எண்ணெய் வர்ண ஓவியமாகும். (……...)

12. Q எழுத்தினால் எழுத்தால் காட்டப்படும் ஓவியப் பகுதியானது
   1) கிரேக்க மேதைகளான பிளேட்டோ அரிஸ்ரோட்டல்
   2) கிரேக்க மேதைகளான பிளேட்டோ, சோக்கிரடீஸ்
   3) கிரேக்க மேதைகளான அரிஸ்ரோட்டில், சோக்கிரட்டீஸ்
   4) கிரேக்க மேதைகளான பைதகரஸ், பிளேட்டோ
   5) கிரேக்க மேதைகளான அரிஸ்ரோட்டில், பைதகரஸ் (………)

13. R என்ற எழுத்தினால் காட்டப்படும் ஓவியத்தின் சிறப்பாக கருதப்படுவது
   1) கிறிஸ்தவ கதையினை சிறப்பாக காட்டியுள்ளமை
   2) மனித உருவங்களில் மெய்நிலை சிறப்பாக காட்டப்பட்டுள்ளமை
   3) தொனிப்பொருளில் இடம்பெறும் உருவங்களையும், பின்னணியையும் இலங்கைக்குரியதாக சித்தரித்தமை
   4) தூரதரிசன நுட்பத்தை சிறப்பாக காட்டியமை
   5) வரையறுக்கப்பட்ட ஒரு சில வர்ணங்கள் பயன்படுத்தியமை மூலம் சிகிரிய ஓவிய சாயலை வெளிப்படுத்தியமை (……...)

14. S எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
   1) மனப்பதிவுவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
   2) பிற்பட்ட மனப்பதிவுவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
   3) கனவடிவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
   4) அரூபவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
   5) அதியதார்த்தவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும். (……...)

15. T எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்.
   1) சோளியஸ் மென்டிஸின் ஓவியம்
   2) சோமபந்து வித்தியாபதியின் ஓவியம்
   3) சார்ரிலிசின் ஓவியம்
   4) ஜோர்ச்கீட்டின் ஓவியம்
   5) அபயசிங்காவின் ஓவியம் (……...)

❖ **16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் உருவப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.**



16. இக்கட்டட நிர்மாணிப்பு
   1) திரியாய கிரிகண்டுசாய வட்டதாகேயாகும்.
   2) மிகிந்தலை அம்பஸ்தலவிலுள்ள வட்டதாகேயாகும்.
   3) மெதிரிகிரிய வட்டதாகேயாகும்.
   4) அனுராதபுர தூபாராமவிலுள்ள வட்டதாகேயாகும்.
   5) பொலன்னறுவை வட்டதகேயாகும். (……...)



17. இங்கு காட்டப்பட்டிருக்கும் செதுக்கல்
   1) போதி மரத்தினை வெளிப்படுத்திக் காட்டுகிறது.
   2) ஜாதக கதையின் ஒரு பகுதியாகும்.
   3) நுணுகிய செதுக்கல் அம்சத்தைக் கொண்டது.
   4) இந்திய செதுக்கல்களில் முக்கிய அம்சங்களாகும்.
   5) புத்தபெருமானை குறியீடாகக் காட்டும் சந்தர்ப்பமாகும். (……...)

18. கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்ட இவ் அமர்ந்து இருக்கும் சிலை



   1) அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒரேயொரு இருந்த நிலை புத்தர் சிலையாகும்
   2) அபயகிரி விகாரைச் சூழலில் காணப்படும் சமாதி புத்தர் சிலையாகும்
   3) கொழும்பு நூதனசாலையில் காணக்கூடிய தொழுவில புத்தர் சிலையாகும்
   4) அனுராதபுர புனித பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பன்குலிய புத்தர் சிலையாகும்
   5) சஸ்சேறுவ கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள சிலையாகும (……...)

19. பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்துப்படி இவ் ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவது



1) பிதுரங்கல விகாரைக்கு பூசை செய்யச் செல்லும் அரசனின் மனைவிமாராவர்
2) காசியப்ப மன்னனின் அந்தப்புர மனைவிமாராவர்
3) காசியப்ப மன்னனின் மகள்மாரான போதி, உத்பலவன்னா ஆகியோராவர்
4) மின்சாரம் என்னும் பெண்களும் முகில்கள் என்னும் பெண்களுமாவர்
5) நீரில் விளையாடும் பெண்களாவர்

(………)

20. இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்பானது.



1) எகிப்தில் காணக்கிடைக்கும் முப் பிரமிட்டுகளில் ஒன்றான குபு பிரமிட்டாகும்
2) பாரா மன்னர்களின் வீரபராக்கிரமங்களைக் காட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட பிரமிட்டாகும்.
3) உலகின் 7 ஆவது அதிசயமாகக் கருதப்படும் பிரமிட்டாகும்.
4) கீசா பீடபூமியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரமிட்டுகளில் மிகப் பெரிய பிரமிட்டாகும்.
5) எகிப்தின் கீசாவிலுள்ள மிகப் பெரிய பிரமிட்டான 'காப்ரே' பிரமிட்டாகும். (………)

❖ **21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிக சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. மேற்கத்தைய யதார்த்தவாத இயற்கைக்கலை உன்னத நிலையில் காணப்பட்ட காலப்பகுதியில் ஓவியக்கலை உலகில் கனவடிவ வாத ஓவிய மரபைமுன்வைக்க முன்னோடியாகத் திகழ்ந்த கலைஞர்கள்
1) பப்லோ பிக்காசோ,ஜோர்ஜ் பிராக் 2) போல் செசான், போல் கோகான்
3) ஒகஸ்டே ரொடீன், ஹென்ரி மூவர் 4) வஸ்லி கன்தின்ஸ்க, ஜக்சன் பொலொக்
5) குளோட் மொனே, எட்வர்ட் மனே (………)

agaram.lk

22. இத்தாலியரான மைக்கல் ஆஞ்சலோவின் பெறுமதிவாய்ந்த படைப்புகளாவன
1) பியேற்றா, இறுதி இராப்போசனம், மோசஸ்
2) பியேற்றா, இறுதித் தீர்ப்பு, உலகைப் படைத்தல்
3) எதென்ஸ் குருகுலம், அல்பா மடோனா, மொனாலிசா
4) மோசஸ், உலகைப் படைத்தல், இறுதி இராப்போசனம்
5) உலகைப் படைத்தல், இறுதித் தீர்ப்பு, எதென்ஸ் குருகுலம் (………)

23. சாஞ்சி தூபியின் ஹர்மிகா' இற்குப் பதிலாக இலங்கைத் தூபிகளில் சேர்க்கப்பட்ட அமைப்பு
1) பேசாவளலு 2) கொத்ஹறல்லா 3) சதுரக்கோட்டம்
4) தேவகோட்டம் 5) கர்பய (அண்டம்) (………)

24. ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்களின் சிறப்பியல்பு
1) பூரணமற்ற பரும்படிக் குறிப்புகள் வரையப்பட்டிருத்தல்
2) இயற்கைப் பிரமாணங்களில் விலங்குகள் வரையப்பட்டிருத்தல்
3) விலங்குகளின் உயிர்ப்பான அசைவுத் தோற்ற மெய் நிலைகள் வரையப்பட்டிருத்தல்
4) மெமத் யானை உருவங்கள் பரவலாக வரையப்பட்டிருத்தல்
5) மரணித்த விலங்குகளின் உருவங்கள் பரவலாக வரையப்பட்டிருத்தல் (………)


25. பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தி சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த நடனக்காரன் வடிவமைக்கப்பட்டுள்ளது?
1) கருங்கல் 2) மரமும் கருங்கல்லும் 3) செம்மணற்கல்
4) செங்கல் 5) சாம்பல் நிறக்கல் (………)

❖ ***26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை K, L, M, N, O எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியப் பகுதிகளிலிருந்து தெரிவு செய்க.***


K


I


M


N


O

26. குப்த கலைமரபினை வெளிப்படுத்தும் படைப்பின் பகுதியைக் காட்டுவது?
1) K 2) I 3) M 4) N 5) O (……...)

27. வட்டதாமனை ஒன்றின் திட்ட வரைபைக் காட்டும் உரு?
1) K 2) I 3) M 4) N 5) O (……...)

28. ஒரு நாகரித்திற்குரிய படைப்பைக் காட்டுவது?
1) K 2) I 3) M 4) N 5) O (……...)

29. கண்டிய காலத்திற்குரிய படிக்கல்லைக் காட்டுவது?
1) K 2) I 3) M 4) N 5) O (……...)

30. பல்லவ கலைமரபினை வெளிப்படுத்தும் படைப்பின் பகுதியைக் காட்டுவது?
1) K 2) I 3) M 4) N 5) O (……...)

❖ ***31 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.***

agaram.lk

31. சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தாய்த்தெய்வ உருவங்கள்
1) பல்வேறு கற்பாறைகளைப் பயன்படுத்திச் செதுக்கப்பட்டுள்ளன.
2) வெண்கலத்தைப் பயன்படுத்தி வார்ப்புச் செய்யப்பட்ட நிர்மாணிப்புகளாகும்.
3) களிமண்ணினால் செய்யப்பட்டு, சுடப்பட்ட டெரகொட்டா நிர்மாணிப்பாகும்
4) பகுதி பகுதியாக நிர்மாணிக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டவையாகும்.
5) மூட்டற்ற வடிவங்களாகச் செதுக்கப்பட்ட சிறிய சிலைகளாகும். (……...)

32. ஒரேயொரு பிற்பட்ட மனப்பதிவுவாதக் கலைஞரின் நிர்மாணிப்புகள்,
1) உருளைக்கிழங்கு உண்பவர்கள், மஞ்சள் நிறத்திலான இயேசு என்பனவாகும்.
2) சைப்பிரஸ் மரங்கள், தஹிட்டியப் பெண்கள் என்பனவாகும்
3) இரவு உணவகம், சிறைச்சாலை விறாந்தை என்பனவாகும்
4) கார்ட்ஸ் (Cards) விளையாடுவோர், நட்சத்திரங்கள் நிறைந்தவொரு இரவு என்பனவாகும்.
5) ஆர்லஸ்சிலுள்ள பாலம், விக்டரிமலை என்பனவாகும். (……...)

33. ஐரொப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்களையும் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட குகைகளில் காணப்படும் பிராணிகளின் உருவங்களையும் ஒப்பிடும்போது வெளிப்படையாகத் தெரியும் இயல்பு, இலங்கைக் குகைகளிலுள்ள பிராணிகளின் உருவங்கள்,
1) அளவிற் சிறியனவாகும்
2) அளவிற் பெரியனவாகும்
3) திறந்தவெளியில் வரையப்பட்டுள்ளவையாகும்.
4) அடிப்படை இயல்புகளைக் கொண்ட குறியீடுகளினாலானவையாகும்.
5) இயற்கையாக வரையப்பட்டிருக்கின்றவையாகும். (……...)

34. மாமத் யானையின் உருவம் வரையப்பட்டுள்ள வரலாற்றுக்கு முற்பட்டகால குகை
   1) லாஸ்கோ
   2) அல்ராமீரா
   3) பொன்டிதகோடேம
   4) நீயோ
   5) கோகுல் (……...)

35. சுவர்க்கம், மனித உலகம், நரகம் ஆகியவற்றைச் சித்திரிக்கின்ற உரோமில் உள்ள தேவாலயத்தில் காணப்படும் விசாலமான பிரஸ்கோ சித்திரத்தை வரைந்தவர்
   1) லியனாடோடாவின்சி
   2) மைக்கல் அஞ்சலோ
   3) ரபாயல்
   4) டேவிற்பெயின்டர்
   5) வின்சட்வான்கோ (……...)

❖ **36 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை பின்வரும் சித்திரத்தினைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.**



36. களனி விகாரையில் இவ்வோவியத்தைக் காணக்கிடைப்பது
   1) பழமையான விகாரைமனையில் ஆகும்.
   2) புதிய விகாரைமனையில் ஆகும்
   3) கிடந்தநிலைச் சிலைமனையில் ஆகும்.
   4) பொற்சிலைமனையில் ஆகும்.
   5) பேரரசன் சிலைமனையில் ஆகும். (……...)

37. இவ்வோவியத்தை வரைந்த கலைஞர்
   1) சுதேச சித்திரக்கலையின் பெருமை பாதுகாக்கப்படும் விதத்தில் நிர்மாணிப்பில் ஈடுபடும் ஒருவராவார்.
   2) சுதேச இயல்புகளைப் பாதுகாக்கும் விதத்தில் மனித உருவங்களைக் கையாளும் தேர்ச்சிகளைக் கொண்டவராவார்.
   3) சுதேச சித்திரக்கலை நுட்பங்களைத் தவிர்த்து இந்திய கலைப்பண்புகளைத் தலைமையாகக் கொண்ட ஒருவராவார்.
   4) அஜந்தா, பார்க் ஓவிய நுட்பங்களை சுதேச பண்புகளுடன் கலந்து நிர்மாணங்களை மேற்கொண்டவராவார்.
   5) நந்தலால் போஸ்சைப் பின்பற்றிய ஒருவராவார். (……...)

38. இந்த ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது
1) விஜயனின் நாகதீப வருகை
2) ஹேமமாலா தனது கணவனான தந்தகுமார்வருகை
3) புத்தரின் நாகதீப வருகை
4) சங்கமித்தை வெள்ளரசுக்கிளையுடன் வருதல்
5) மகிந்த தேரர் தேவநம்பிய தீஸனைச்சந்தித்தல் (……...)

39. இந்த ஓவியத்தின் வர்ணப் பயன்பாட்டின் விசேட தன்மை
1) அடிப்படை வர்ணங்களின் வகைப்படுத்தலின் மூலம் பாவ ரசத்தை வெளிப்படுத்தலாகும்.
2) அதிகூடிய ஒளியை கருத்துடைய விதத்தில் பயன்படுத்தியுள்ள முறையாகும்.
3) வரையறுக்கப்பட்ட வர்ணங்களின் மூலம் பல்வகைப்பட்ட சாயல்களை சிறந்த முறையில் கையாளலாகும்.
4) அதிகளவாகப் பயன்படுத்தப்பட்ட குளிர் வர்ணங்களைச் சிறந்த முறையில் வெளிப்படுத்தலுக்குப் பயன்படுத்தியுள்ளமையாகும்.
5) முன்னணியிலிருந்து பின்னணி வரை பரவலடையும் வர்ணங்கள் முறையாக கடும் வர்ணத்துக்கு மாறுதலாகும். (……...)

40. இந்த ஓவியநிர்மாணிப்பின் போது
1) பாவத்தைச் சித்திரிப்பதை விட இயற்கைத் தன்மைக்குக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
2) உரிய சூழல் சித்தரிப்பின் மூலம் பக்தி சிரத்தைக்குப் பதிலாக மறைமுக நிலைமையொன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
3) சித்திரிக்கப்பட்டுள்ள அங்கங்கள், வர்ணங்களை ஒழுங்கான முறையில் பயன்படுத்தியதன் மூலம் சிரத்தையுடனான பக்தியைப் போன்று கம்பீரமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
4) சமயத் தன்மையை விட வரலாற்றுத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.
5) இயற்கைச் சித்திரிப்பை விட மனித உருவங்களில் கூடுதலான அக்கறை காட்டப்பட்டுள்ளது. (……...)

agaram.lk

## பகுதி– II

❖ **விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. இந்தியக்கலைமரபின் செல்வாக்கைப் பறைசாற்றும் அற்புத ஓவியக்களஞ்சியம் சிகிரியாவாகும்.

1) சிகிரியா பெண்ணுருவங்கள் தொடர்பாக அறிஞர்கள் முன்வைத்த கருத்துகள் நான்கு தருக?

2) சிகிரியாவில் சித்திரத்தை வரைவதற்கு முன்னர் பாறைச் சுவரைத் தயாரித்துக் கொண்ட தன்மையை பற்றி சுருக்கமாக குறிப்பிடுக.

3) சிகிரியா சித்திரத்தினுள் அன்றைய சித்திரக்கலைஞர்களிடம் இருந்த ஆக்கபூர்வத் திறமை சிறப்பாக வெளிப்படுகின்றது. சிகிரியாச் சித்திரங்களில் பயன்படுத்திய நுட்பமுறையை வெளிப்பாட்டினூடாக விளக்குக.

02. இலங்கையில் தற்காலாத்தில் இருந்த சித்திரக்கலைஞர்களால் கலையின் போஷணைக்கு செய்யப்பட்ட பங்களிப்பைஈடுசெய்தல் அரிது.

1) கண்டி திருத்துவக்கல்லூரி ஓவியங்கள் மூன்று தருக.

2) முதலியால் அமரசேகராவில் பிரதிமைச் சித்திரக்கலை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

3) எம் சார்கினிஸ் கலைஞர் மாளிகாகத்த பிரிவெனையில் ஆரம்பித்த சித்திரக்கலைத் தொண்டானது இலங்கையில் விகாரையில் சித்திரக்கலையினை உயர்மட்டத்திற்குள் கொண்டு வருவதற்குக் திறன் பெற்றது. இதனைவிளக்குக.

03. வரலாற்றுக்கு முற்பட்ட புராதன காலத்து மனிதர் தனது அண்மைச் சூழலுடன் இணைந்து வாழ்ந்ததுடன் அவ்வாழ்க்கை அனுபவங்களை வெளிப்பாட்டின் ஊடாக வெளிப்படுத்துவதற்கு ஐரோப்பாவின் புராதன இலங்கையில் குகை வாசிக்கும் முயந்துள்ளமை வெளிப்படையாகும்.

1) பிரான்சில் வரலாற்றுக்கு முற்பட்ட புராதன குகைச் சித்திரங்கள் காணப்படும் இடங்கள் மூன்றின் பெயர்களைத் தருக?

2) ஐரோப்பிய குகை ஓவியங்களும், இலங்கைப் புராதன வாசிகளுடையது எனக் கருதப்படும் குகைச் சித்திரங்களும் சித்திரப் பண்புகளால் வேறுபடுகின்ற தன்மை சுருக்கமாக விளக்குக.

3) ஐரோப்பிய குகை ஓவியங்கள் வரையப்பட்ட நோக்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் காணப்படுகின்ற கலைப்பண்புகள் பற்றி அல்ரா மீராக் குகை சித்திரத்தில் மூலம் விமர்சிக்குக.

04. இத்தாலியில் சிற்ப ஓவியக் கட்டக்கலையில் புத்தெழுச்சி ஏற்படுத்திய கலைஞர்களாக மூவர் கருதப்படுகின்றனர்.

1) லியானோடோ டாவின்சியால் வரையப்பட்ட மனித வடிவங்கள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட சித்திரங்கள் மூன்றின் பெயரைத் தருக.

2) மைக்கல் அஞ்சலோ சிஸ்ரைன் தேவாலயத்தின் விதானத்தில்வரைவதற்கு தெரிவு செய்த தொனிப்பொருளைஅடிப்படையாகக்கொண்டு விதானப் பரப்பை திட்டமிட்டுள்ள தன்மை பற்றி சுருக்கமாக கூறுக.

3) செயல்பாட்டுடன் கூடிய மனித வடிவங்களை கொண்டு ஒழுங்கமைத்துக் கொள்ளும் ராபாயலின் ஆற்றலை அவரது சித்திரத்தை உதாரணமாக கொண்டு விளக்குக.

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை-2017
# Term Examination, July - 2017

| சித்திரக்கலை II | தரம் :- 12 (2018) | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- ✶ **உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.**
- ✶ **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.**

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்**

❖ **பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.**

agaram.lk

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேற்பார்வையாளருக்குரியது

## நிலைப்பொருட்கூட்ட வரைதல்

## (ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்களின் அமைப்பு)



agaram.lk

**ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்**

(1) பெட்டி
(2) துவாய்
(3) பானை
(4) பந்து
(5) தேமா மரக்கிளை

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை-2017
## Term Examination, July - 2017

| சித்திரக்கலை III | தரம் :- 12 (2018) | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க.**

- **நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.**
- **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.**
- **வர்ணந்தீட்டுவதற்கு நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)**
- **வரைதற்கு வெள்ளைத்தாளும் தேவையானவர்களுக்குத் திசுத்தாளும் வழங்கப்படும்.**

❖ **பகுதி அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

### "அ"பகுதி - சித்திர ஒழுங்கமைப்பு

*(1)* சமய தினத்தில் இறைவனுக்குப் பூஜைகள் செய்யும் பக்தர்கள்.
*(2)* வேலைத்தளம் ஒன்றில் வேலையில் ஈடுபடும் தொழிலாளர்கள்.
*(3)* ஆறு அல்லது குளமொன்றில் மாடுகளை குளிப்பாட்டும் மனிதர்கள்.

agaram.lk

### "ஆ" பகுதி - அலங்கார ஆக்கம்

*(4)* சிறுவர் உடை தைப்பதற்கு ஏற்ற சீத்தைத் துணிக்குப் பொருத்தமான சிறுவர் கார்டூன் பாத்திரம் ஒன்றைப் பயன்படுத்தி பரவுரூப அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்க.
*(5)* நீள் சதுர வடிவமைப்புடைய மேசைத்துணி ஒன்றிற்குப் பொருத்தமாக முழுத்தள அலங்காரம் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரத்தன்மையில் நிர்மாணிக்க.
*(6)* 5''X 5'' அளவுடைய குஷன் கவர் ஒன்றிற்கு கேத்திரகணித வடிவத்தைப் பயன்படுத்தி ஆக்கம் ஒன்றைச் செய்க.

### "இ" பகுதி கிறபிக் சித்திரம்

*(7)* "இயற்கையை பாதுகாப்போம்" என்னும் தலைப்பின் கீழ் அழகான சுவரொட்டி ஒன்றை நிருமாணிக்க.
*(8)* பாடசாலை இல்ல விளையாட்டு விழாவின் பொருட்டு தயாரிக்கும் நினைவுமலர் ஒன்றின் வெளியட்டைக்குப் பொருத்தமான ஆக்கம் ஒன்றை வரைக.
*(9)* பழுச்சாறு வகை ஒன்றை விளம்பரம் செய்வதன் பொருட்டு வியாபார நிலையங்களில் தொங்கவிடுவதற்குப் பொருத்தமான காற்றில் அசைவை ஏற்படுத்துகின்ற பிரச்சார விளம்பரம் ஒன்றைத் திட்டமிடுக.